**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP. 34 /2021**

**Deposition of P.W. 1-** திருப்பதி

**Dated: 20.09.2024**

<u>**1வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1வது எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

<u>**3வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எனது மகன் விபத்தில் இறக்கும் போது 17 வயதுடைய இளவர் என்றால் சரிதான். எனது மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் கிடையாது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் விபத்திற்கு காரணம். 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகன எண் எனக்குத் தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த TN 75 AE 1600 என்ற இருசக்கர வாகனத்திற்கு விபத்து சமயம் காப்பீடு கிடையாது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம் கிடையாது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது மகனின் வருமானத்தை காட்ட சான்று தாக்கல் செய்யவில்லை. எனது மகன் விபத்து சமயம் இஞ்சீனியரிங் படித்து வந்தார். எனது மகனுக்கு எவ்வித வருமானமும் கிடையாது என்றால் சரியல்ல. எனது மகன் நாங்கள் ஓட்டி வந்த வாகனத்திற்கு 3வது நபர் கிடையாது என்றால் சரிதான். எனது மகன் ஓட்டி வந்த வாகனம் தான் 3வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனது மகனுக்கு விபத்து சமயம் ஓட்டுனர் உரிமம் இல்லாததால் 3வது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க

கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 3வது எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.